| TNVR13000155 2016 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை—திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,<br>சார்பு நீதிபதி<br>2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8 ம் நாள் வியாழக்கிழமை<br>I.A.No.5/2024 in O.S.No.12/2016 |
|---|---|

1. அருப்புக்கோட்டை தேவாங்கர் தளமனை அம்பலம்
   உறவின்முறை அதன் தலைவர்
2. அருப்புக்கோட்டை தேவாங்கர் தளமனை அம்பலம்
   உறவின்முறை அதன் செயலாளர்
3. அருப்புக்கோட்டை தேவாங்கர் தளமனை அம்பலம்
   உறவின்முறை அதன் பொருளாளர் ... மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகள்

எதிரிடை

1. ராதாகிருஷ்ணன்
2. குணாளன் ... எதிர்மனுதாரர்கள் / 2, 3 வாதிகள்

இந்த மனு 31.07.2024 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.ராஜாதேசிங் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

## உத்தரவு

வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராது சட்டப்படி நிலைநிற்கத்தக்கது இல்லை என்று முடிவு செய்து வாதிகளின் பிராதை நிராகரிப்பு செய்து உத்தரவிடக்கோரி இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11(a)(d) மற்றும் பிரிவு 151 சிபிசியின்படி மனுதாரர்கள் /4 முதல் 6 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு சுருக்கம்:

(i) சிவானந்தம் என்பவர் மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகளான அருப்புக்கோட்டை தேவாங்கர் தளமனை அம்பலம் உறவின்முறை தலைவராக 2021 ம் ஆண்டில் இருந்து செயல்பட்டு வருகிறார். உறவின்முறை செயலாளராக சதாசிவம் என்பவரும், பொருளாளராக உதயகுமார் என்பவரும் செயல்பட்டு வருகிறார்கள்.

ஆனால், அதற்கு உரிய சீர்திருத்தத்தை வாதிகள் பிராதில் செய்ய தவறிவிட்டார்கள். தாவாச் சொத்து என்பது அருப்புக்கோட்டை சர்வே எண் 183/1 விஸ்தீரணம் 96 செண்டு நிலம் உள்ள புஞ்சை நிலமாகும். வாதிகள் தாவாச் சொத்தினை 64 சம பாகங்களாகப் பிரித்து அதில் 16 பாகத்தை 3ம் வாதிக்கும், 5 பாகத்தை 2ம் வாதிக்கும் ஒதுக்கக் கோரி பிராது தாக்கல் செய்தார்கள். பின்னர் மேற்படி பிராதை சீர்திருத்தம் செய்து மாற்றுப் பரிகாரமாக தாவாச் சொத்து அருள்மிகு சுந்தர விநாயகர் கோவில் மடத்திற்கு பாத்தியமானது என்று விளம்புகை செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகளின் வழக்கு பொய்யானது என்பதையும், பிராது சட்டப்படி நிலைநிற்கத்தக்கது இல்லை என்பதையும் விபரமாகக் கூறி, மனுதாரர்கள் எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரைகள் தாக்கல் செய்துள்ளார்கள்.

(ii) வாதிகள் தாவாச் சொத்து என்பது டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று ஒப்புக்கொண்டு இந்த வழக்கை சீர்திருத்தம் செய்துள்ள நிலையில் டிரஸ்ட் சொத்தைப் பொறுத்து தனிப்பட்ட நிலையில் பாகம் கோர வாதிகளுக்கு உரிமை இல்லை என்பதை தெளிவாக விளக்கி 2013(5) சிடிசி பக்கம் 593ல் தெளிவாக தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, வாதிகளின் பாக வழக்கு மேற்படி தீர்ப்பின்படி சட்டப்படி நிலைநிற்கத்தக்கது இல்லை. மேலும் மாற்றுப் பரிகாரமான தாவாச் சொத்து அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்திற்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோர வாதிகளுக்கு அருகதை கிடையாது. மேற்படி பரிகாரம் கோருவது சம்பந்தமாக எந்தவித விபரமும் பிராதில் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மேற்படி பரிகாரத்தைப் பொறுத்து வாதிகளுக்கு எந்தவித வழக்கு மூலமும் கிடையாது. மேலே கண்ட காரணங்களுக்காக வாதிகளின் பிராதை நிராகரிப்பு செய்ய வேண்டியது சட்டத் தேவையாக உள்ளது. எனவே, வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என முடிவு செய்து வாதிகளின் பிராதை நிராகரிப்பு செய்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

**3.** <u>எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>

(i) மனு சட்டப்படி செல்லாது. மனுதாரர்களின் உறவின்முறை சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை. எனவே மனுதாரர்கள் பதிவு செய்யப்படாத உறவின்முறையின்

பொறுப்பில், நிலையில் இருந்து இம்மனுவைத் தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையில்லை. அதனால் சிபிசி ஆர்டர் 1 ரூல் 8ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, பிரதிநிதிகள் ஸ்தானத்தில் அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளது. வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதை நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்திருக்கும் அபிடவிட்டில் சிபிசி ஆர்டர் 7 ரூல் 11ல் கூறப்பட்டுள்ள காரணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை. தாவாச் சொத்தை எதிர்மனுதாரர்களின் முன்னோர்கள் சுயமாக 9.9.1905ம் தேதிய பதிவு செய்த கிரையப்பத்திரத்தின்படி கிரையம் பெற்று மேற்படி தாவாச் சொத்தில் தர்மத்தை ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். அதன்பின்னர் மேற்படி சொத்தில் தொடர்ந்து தர்மத்தை நடத்த வேண்டுமென்று 21.5.1920ம் தேதியில் பதிவு செய்த செட்டில்மெண்ட் ஒன்றை எழுதி தாவாச் சொத்தை அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் தர்மத்தை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் நடத்தி வரவேண்டுமென்றும் கூறியுள்ளார்கள். மேற்படி 21.5.1920ம் தேதியில் பதிவு செய்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட 2வது நபரான வீரபத்திரன் செட்டியார் மகனும் அசல் வழக்கின் 2ம் பிரதிவாதியின் தந்தையும் 1 மற்றும் 3 பிரதிவாதிகளின் தாத்தாவுமான வீரப்பன் செட்டியாரிடமிருந்து தாவாச் சொத்தை மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகள் உறவின்முறையினர் மோசடியாக 29.7.1956ம் தேதியில் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதியுள்ளார்கள். பின்னர் இந்த மனுதாரர்கள் தாவாச் சொத்தை அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் தேவாங்கர் வர்த்தக சங்கத்திற்கு 7.7.1984ம் தேதியில் பதிவு செய்த தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார்கள். பின்பு அதனை ரத்து செய்து 30.5.1988ம் தேதி தானசெட்டில்மெண்ட் ரத்துப் பத்திரம் பதிவு செய்துள்ளார்கள். தாவாச் சொத்தை மோசடியாக அபகரிக்கும் நோக்கத்தில் மேற்படி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளார்கள்.

(ii) தாவா தர்ம சொத்தை பந்தக பாராதீனம் செய்ததால்தான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ஒருக்கால் பாகப்பிரிவினை செய்ய முடியாது என்று நீதிமன்றம் கருதும்பட்சத்தில் மாற்றுப் பரிகாரமாக தாவாச் சொத்து அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்துக்கு பாத்தியமானது என்று விளம்புகை செய்யக் கோரியும் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. இரண்டு பரிகாரங்களுக்கும்

வியாஜ்ஜியமூலம் ஒன்றுதான். வியாஜ்ஜியமூலம் என்பது விசயங்கள் கூட்டுகலவை ஆகும். மேலும் இந்த வழக்குடன் எதிர்கோரிக்கையும் நிலுவையில் இருந்து வருகிறது. எதிர்கோரிக்கையில் கேட்டுள்ள பரிகாரம் தாவாச் சொத்து அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்துக்கு பாத்தியமானது என்று விளம்புகைப் பரிகாரம் கேட்டு, மனுதாரர்கள்/4, 5, 6 பிரதிவாதிகள் எழுதிப் பெற்றுள்ள 26.7.1956ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்தைக் கட்டுப்படுத்தக்கூடியதல்ல எனக் கேட்டு எதிர்கோரிக்கைதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த எதிர்கோரிக்கையில் இந்த 1ம் எதிர்மனுதாரரும் தரப்பினராக இருப்பதால் இரண்டு வழக்கையும் இணைத்து விசாரிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகள் மோசடி பத்திரம் எழுதியிருப்பதால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய வியாஜ்ஜியமூலமே ஏற்பட்டது. எனவே, இந்த வழக்கு தாக்கல் செய்ய வியாஜ்ஜியமூலம் இருக்கிறது.

(iii) மனுதாரர்கள் / 4,5,6 பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில், இந்த எதிர்மனுதாரர்களின் முன்னோர்கள் சுயமாக 9.9.1905ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் புஞ்சை நிலமாக கிரையம் பெற்றதாகவும், பின்னர் தாவாச் சொத்தில் நந்தவனம் கிணறு சுந்தரவிநாயகர் கோவில் மடம் ஆகியவற்றை ஏற்படுத்தி தர்மத்தைத் தொடர்ந்து நடத்தி வந்ததாகவும், அதன்பின்னர் 21.5.1920ம் தேதியில் பதிவு செய்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி தாவாச் சொத்தை அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்திற்கு பாத்தியப்பட்ட தர்ம சொத்து என ஒப்புக்கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கு 2016ல் தாக்கல் செய்யப்பட்டது. 8 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலதாமதமாக இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிதரப்பு சாட்சி விசாரணை செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மற்ற பிரதிவாதிகள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/2ம் வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், வழக்கை காலங்கடத்துவதற்காக மட்டுமே விசாரணை தொடங்கிய பின்பு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா மனு நல்லெண்ணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இம்மனுவானது, காலம் கடந்து வேண்டுமென்றே தாக்கல் செய்திருப்பதால்,

எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. தாவா சொத்தைப் பொறுத்து, அசல் வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.1 ஐ 2 முதல் 6 பிரதிவாதிகள்தரப்பில் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளதாக தெரிய வருகிறது. இந்நிலையில், வாதிகள் தாவாச் சொத்து என்பது டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று ஒப்புக்கொண்டு இந்த வழக்கை சீர்திருத்தம் செய்துள்ள நிலையில் டிரஸ்ட் சொத்தைப் பொறுத்து தனிப்பட்ட நிலையில் பாகம் கோர வாதிகளுக்கு உரிமை இல்லை என்பதை தெளிவாக விளக்கி 2013(5) சிடிசி பக்கம் 593 ல் தெளிவாக தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது எனவும், எனவே, வாதியின் பாக வழக்கு மேற்படி தீர்ப்பின்படி சட்டப்படி நிலைநிற்கத்தக்கது இல்லை எனவும், மேலும் மாற்றுப் பரிகாரமான தாவாச் சொத்து அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்திற்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோர வாதிகளுக்கு அருகதை கிடையாது எனவும், மேற்படி பரிகாரம் கோருவது சம்பந்தமாக எந்தவித விபரமும் பிராதில் தெரிவிக்கப்படவில்லை எனவும், மேற்படி பரிகாரத்தைப் பொறுத்து வாதிகளுக்கு எந்தவித வழக்கு மூலமும் கிடையாது எனவும், எனவே வாதிகளின் பிராதை நிராகரிப்பு செய்து உத்தரவிட வேண்டும் என்பதாக மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

6. ஆனால், மனுதாரர்களின் உறவின்முறை சட்டப்படி பதிவு செய்யப்பட–வில்லை எனவும், மனுதாரர்கள் பதிவு செய்யப்படாத உறவின்முறையின் பொறுப்பில், நிலையில் இருந்து இம்மனுவைத் தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையில்லை எனவும், அதனால் சிபிசி ஆர்டர் 1 ரூல் 8 ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, பிரதிநிதிகள் ஸ்தானத்தில் அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளது எனவும், வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதை நிராகரிக்கக்கோரி தாக்கல் செய்திருக்கும் அபிடவிட்டில்

சிபிசி ஆர்டர் 7 ரூல் 11ல் கூறப்பட்டுள்ள காரணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை எனவும், தாவா தர்ம சொத்தை பிரதிவாதிகள் பந்தக பாராதீனம் செய்ததால்தான் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது எனவும், ஒருக்கால் பாகப்பிரிவினை செய்ய முடியாது என்று நீதிமன்றம் கருதும்பட்சத்தில் மாற்றுப் பரிகாரமாக தாவாச் சொத்து அருள்மிகு சுந்தரவிநாயகர் கோவில் மடத்துக்கு பாத்தியமானது என்று விளம்புகை செய்யக் கோரியும் பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது எனவும், இரண்டு பரிகாரங்களுக்கும் வியாஜ்ஜியமூலம் ஒன்றுதான் எனவும், மனுதாரர்கள் / 4, 5, 6 பிரதிவாதிகள் மோசடி பத்திரம் எழுதியிருப்பதால்தான் இந்த வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய வியாஜ்ஜியமூலமே ஏற்பட்டது எனவும், இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 8 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலதாமதமாக இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், வழக்கை காலங்கடத்துவதற்காக மட்டுமே விசாரணை தொடங்கிய பின்பு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

7. அசல் வழக்கானது பகுதியாக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக போடப்பட்ட சமயத்தில் அசல் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதன் அடிப்படையில் பிராதை நிராகரிக்க வேண்டும் என ஆர்டர் 7 ரூல் 11 (டி)ன்கீழ் 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. தாவாச் சொத்து டிரஸ்டி சொத்து என ஒப்புக்கொள்ளப்பட்டு, அதில் பாகம் கோருவது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என மனுதாரர்கள் தரப்பில் மேற்சொன்ன முன்தீர்ப்புரை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. அசல் வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் வழங்க வேண்டுமா? அல்லது டிரஸ்டிக்குப் பாத்தியப்பட்ட சொத்து என விளம்புகை செய்ய வேண்டுமா? என்பதுதான் முடிவு செய்ய வேண்டிய சங்கதியாக உள்ள சூழ்நிலையில், இந்த மனு ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட பிரச்சனையை அசல் வழக்கில்தான் இருதரப்பு சாட்சிய விசாரணைக்குப் பிறகுதான் தீர்மானிக்க இயலும் எனவும், தற்போது அதுசம்பந்தமாக முன்தீர்ப்புரையின் அடிப்படையில் மட்டுமே முடிவு செய்துவிட இயலாது எனவும் இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. டிரஸ்டி சொத்தில் பாகம் கோருவது சட்டப்படி செல்லாது என்பதுதான் மனுதாரர்தரப்பு ஆட்சேபணையாக உள்ளது. ஆனால்,

திருத்தப்பட்ட வழக்குரையில் டிரஸ்டி சொத்தில் பாகம் கோராமல் ஆரம்பத்தில் பாகம் கோரப்பட்ட வழக்கினை திருத்தி மாற்றுப்பரிகாரமாக டிரஸ்டு சொத்து என விளம்புகைப்பரிகாரம் கோரப்பட்டுள்ளதாகவே தெரிய வருகிறது. எனவே, மனுதாரர்கள் சொல்லக்கூடிய சட்டப்பிரச்சனை பிராதில் இல்லை என இந்நீதிமன்றம் காண்கிறது. தாவாச் சொத்து பாகம் செய்யப்படவேண்டிய சொத்தா? அல்லது டிரஸ்டி என விளம்புகை செய்யப்படவேண்டிய சொத்தா? என முடிவு செய்வதற்கு முன்பாகவே பிராதை நீக்கரவு செய்யவேண்டும் என அவசியம் எழவில்லை என இந்நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. எனவே, இந்த சூழ்நிலையில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2024.08.08 17:04:25 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> – இல்லை.
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை.

J SELVAN JESU RAJA
Digitally signed by J SELVAN JESU RAJA
Date: 2024.08.08 17:04:33 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.5/2024 in O.S.No.12/2016
சீரான / வரைவு உத்தரவு
நாள் – 08.08.2024